நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 27 ஜ. ஆகி 29 இதழ் 29
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-3-1986

## திருமலையில் 8 பேர் பலி! மூவர் காயம்!

(திருகோணமலை)
திருகோணமலைப் பகுதியில் உள்ள நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமான அலுவலகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 8பேர் பலியானார்கள், 3 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப்பகல் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

[5ம் பக்கம் பார்க்க]

### நொச்சிமுனை, ஆரயம்பதி கிராமங்கள் முற்றுகை:

## ஒருவர்பலி! 15 பேர் கைது!

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நொச்சிமுனை, ஆரையம்பதி ஆகிய இரு கிராமங்களும் நேற்று ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை இடம்பெற்றது.

இச்சோதனையின்போது ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குணம் (19 வயது) என்பவர் பலியா

(5ம் பக்கம் பார்க்க)

## ● 'தமிழ் இனத்தின் ஜீவமரணப் போராட்டம்' லண்டனில் கண்காட்சி!

[லண்டன்]
இலங்கைத் தமிழர் பிரச்னைகளையும் அண்மைக் காலங்களில் அவர்கள் அனுபவித்த துன்ப, துயரங்களையும் சித்தரிக்கும் நிழற்படங்கள் மற்றும்விவரணங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்று மார்ச் 13ம் திகதிமுதல் 26ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

''தமிழினத்தின் ஜீவ மரணப் போராட்டம்'' என்ற மகுடத்தின் கீழ், சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளுக்கான லண்டன் கவுன்சில், ஈழ மாணவர் பொதுஅமைப்பு ஆகியவற்றினது ஆதரவின்கீழ் நடைபெறவுள்ள மேற்படி கண்காட்சியில் அண்மைக்காலங்களில் வட-கிழக்குப் பிரதேசங்களில் ஆயுதப்படையினரால் அப்பாவி மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களினது விளைவுகளைச் சித்தரிக்கும் நிழற்படங்களும் மற்றும் விவரண தஸ்தாவேஜுகளும் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

## பார்த்தசாரதி ராஜினமா?

(கொழும்பு)
இந்திய வெளிவிவகார கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் ஜி பார்த்தசாரதி தமது பதவியை ராஜினமாச் செய்துவிட்டாரா?

இந்தப்பதவி, அமைச்சர் அந்தஸ்தைக்கொண்ட பதவி என்பது குறிப்பிடத்தக்கது.
மார்ச் 15 'இந்தியா ருடே''

(5ம் பக்கம் பார்க்க)

### ● பறயனுலங்குளத்தில் புதிய இராணுவமுகாம்:

# அனுதைகளாக 300 குடும்பங்கள்!

# அகதிகள் தேவாலயத்தில் தஞ்சம்!

## நேற்றும் 3 பெண்கள் உட்பட 10 பேர் கைது!

(ஏ. வி. மாணிக்கம்)

**வவனியா மாவட்டத்திலுள்ள பறயனுலங்குளத்தில் நிரந்தரமாக இராணுவமுகாம் ஒன்று அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் வசித்துவந்த 300க்கு மேற்பட்ட குடும்பத்தவர்கள் பீதியினுல் தங்கள் வீடுவாசல்களை விட்டு அகதிகளாகியுள்ளனர்.**

வவனியா-மன்னர் வீதியில் உள்ள அரசபாடசாலையிலேயே இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களும் தொடர்ந்து கல்விபயில வசதியின்றி அவஸ்தைப்படுகின்றனர்.

இராணுவமுகாம் அமைக்கப்பட்ட பின்னர் கன்னுட்டி, கணேசபுரம் ஆகிய கிராமங்கள் இப்பொழுது வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இராக் காலங்களில் மட்டுமல்ல; பகல் வேளையிலும் தங்கள் தொழில்களைச் செய்யமுடியாமலும், விவசாயம் செய்யமுடியாமலும், நிம்மதியாக வீடுகளில் தங்கியிருக்கமுடியாமலும் இம்சைப்படுத்தப்படுவதாக அகதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

### வெளிநாட்டவர்க்கு 'விஸா' வழங்குவதில்

## விழிப்பாயிருக்குமாறு அரசு எச்சரிக்கை!

(கொழும்பு]
வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு விசா' வழங்கும் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்குமாறு எல்லா நாடுகளிலும் உள்ள தனது தூதுவராலயங்களுக்கும் இலங்கைஅரசு எச்சரிக்கை விடுத்துள்ளது

இலங்கைக்கு வெளிநாடுகளின் உல்லாசப் பயணிகளை வருவிக்சமுயலும் இலங்கை உல்லாசப்பயணசபை முகவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## உருக்கமான வேண்டுகோள்

01-03-1986 அன்று இரவு எமது ஸ்ரோரிலிருந்து [18 யூபிலி பசார்] பெருமளவு ஜோண்சன்/எவின்றூட் அவுட்போட் மோட்டார் உதிரிப்பாகங்களும், மின்சார உபகரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதனுல் மேற்குறிப்பிட்ட வெளியிணைப்பு இயந்திர உதிரிப்பாக விற்பனையைத் தொடர்ந்து மேற்கொள்ளமுடியாத இக்கட்டான நிலைமைக்கு ஆளாகியுள்ளோம். இதனுல் பலவழிகளிலும் இன்னலுக்குள்ளாகியிருக்கும் கடற்றெழிலாளரும் எம்மோடு சேர்ந்து பாதிப்புக்குள்ளாகியிருக்கிருர்கள். எனவே கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்டுத்தருமாறு புனிதமான இயக்கங்களை வேண்டிக்கொள்ளுகிருேம்.

### நியூ லங்கா றேடர்ஸ்

222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C 1102]

## "முதலில் யுத்த நிறுத்தம்; பின்னரே பேச்சுவார்த்தை"

### இந்தியா இப்படிகூறியிருக்கவேண்டும் என்கிருர் கருணுநிதி

(சென்னை)
''இலங்கை அரசு, நிபந்தனையற்ற போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செயலாற்றினுல் அன்றி பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்திய அரசு கூறியிருக்கவேண்டும்'' என்று தி. மு. க. தலைவர் திரு மு. கருணுநிதி நேற்று திருச்சியில் கூறினுர்.

இலங்கைத் தமிழர் சிக்கலில் இந்திய அரசின் அணுகுமுறை பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினுர்.

''போர்நிறுத்த உடன்பாட்டுக்கு இலங்கை அரசு முன்

[5 ம் பக்கம் பார்க்க]

## தமிழ் மக்கள்படும் இன்னல்:

### கனடா ஸ்தானிகர் செவிமடுத்தார்

[கா. யோகநாதன்]
தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தப்படும் தரை, வான், கடல் தாக்குதல்கள் பற்றியும், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்தும், பிரஜைகள்குழு இணைப்புக்குழுவினர், அன்னையர் முன்னணியினர், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனங்கள், கனடா உயர் ஸ்தானிகர் திரு. டி. எம். கொலகொட்டிற்கு, ஒளிவு மறைவின்றி விபரமாகநேற்று விளக்கிக்கூறினுர்கள்.

நிச்சயம் இவற்றைக் கவன

(7 ம் பக்கம் பார்க்க)

### காட்டில்'வான்'! ஆட்களோ முகாமில்!

[வவனியா]
வவனியாவிலிருந்து பறையன்ஆலங்குளம்சென்றவானில் பிரயாணம்செய்த ஒன்பது பேரைக் காணவில்லை என்று வவனியா அரச அதிபருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

[5-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ். 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C-1130

Nell Farm பிறவுண் சேவற் குஞ்சுகள் 11ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 1154)

அல்ஷேஸன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: டானியல் பொனிபஸ், மவுண் காமல் ரோட், 16/1 வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். [கமலா ஸ்ரோர்ஸ்க்கு பின்பக்கம்] [C1105]

சங்கானை மேற்கு, வடலியடைப்பில் வீட்டுடன் 5½ பாப்பு காணி விற்பனைக்குண்டு. ச. குணராசாவுடன் தொடர்பு கொள்ளவும். C-1096

## வகுப்புகள்

தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 1-4-1986 பயிற்சிக் காலம் - 6 மாதம் கிழமை நாட்களில் இரு தினங்கள், விண்ணப்ப முடிவு திகதி 20-3-1986. கட்டணம் மாதமொன்றிற்கு ரூபா 150/- மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும் திரு. S. குணளன். ரெலிகோணர் சாவகச்சேரி. [C 1095]

மோட்டார் றீவயின்டிங்: பயிற்சி முதல் வகுப்பு ஆரம்பம்: 10-3-86. முழுப்பயிற்சிக்கும் கட்டணம் 450 ரூபா. காலம் 3 மாதம் [2] வயறிங் பயிற்சி முதல்வகுப்புஆரம்பம்: 14-3-86. முழுப்பயிற்சிக்கும் கட்டணம் 200 ரூபா. காலம் 1½ மாதம் ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C1126]

## தவறிவிட்டது

சுப்பையா செல்வராசா, அராலி வடக்கு செட்டியா மடம் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சு. செல்வராசா 'மாலா சயிக்கில் பலஸ்', சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 1165]

### WANTED

Wanted a female Steno cum Accounts Clerk for a Construction firm in Jaffna. The applicant should be a resident in the Jaffna municipality area Please apply on or before 15th March. Adv. No C 1166 C./o. Eelanadu. Jaffna. [C 1166]

### சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
[வரையறுள்ளது]
சுன்னாகம்.

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 3000 ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

19-03-1986 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்,
சுன்னாகம் பல நோ.
கூ. சங்கம்,
9-03-1986 [A 350)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
# அழைப்பு

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

யாழ்ப்பாண மாநகர
## தீயணைப்புச் சேவை

கனேடிய உயர் ஸ்தானிகர்
மாண்புமிகு டீ. எம். கொலகொட் அவர்களால்
12-03-1986 புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும்.

இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
11-03-86. (A 351)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### தனுஷா ஆனந்தராஜா

வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த ஆனந்தராஜா நிர்மலா தம்பதிகளின் செல்வப்புதல்வி தனுஷா இன்று (11-03-86) தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார், சித்தப்பாமார், சித்தி, சவூதி பொன்னர் சித்தப்பா, பிறேமிலா அன்ரி, மாமாமார், சுவிஸ் குகன்மாமா, தாத்தாமார், சுலோமச்சாள், மச்சான்மார், அண்ணைமார், அக்காமார் மற்றும் உறவினர் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள், C 1159

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் பா. தினேஷ்குமார்

பரந்தனைச்சேர்ந்த திரு. த. பாலகிருஷ்ணன் சந்திராதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் தினேஷ்குமார் தனது 1-வது பிறந்த தினத்தை இன்று (11-03-86) இல் தமது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறார். தினேஷை அன்பு அப்பா, அம்மா. அப்பப்பா. அம்மப்பா, அம்மம்மா, வவுனியா மாமா, அத்தை, அத்தான், மச்சாள், அளவெட்டி மாமாமார், அத்தைமார், அத்தான், மச்சாள்மார், சாவகச்சேரி மாமா, அத்தை, ஜனந்தன் அண்ணை, பெரியப்பா, பெரியம்மா. செல்வாநகர் அன்ரிமார், மாமாமார், நவசக்தி பரந்தன் மாமாமார் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் பல்கலையும்பெற்று வளமுடன்வாழ வாழ்த்துகிறார்கள். C-1144

# "அமரர் சுப்பிரமணியம் ஒரு புதுமையான மனிதர்"

(சுழிபுரம்)

''முப்போதும் திருமேனி தீண்டும் பேறு எல்லோருக்கும் கிடைப்பது இல்லை. யாவரையும் ஒரே கண் கொண்டு பார்க்கும் பேறும் எல்லோராலும் செய்யக்கூடிய காரியமாகாது இவ்வாறான ஓர் புதுமையான மனிதராக எம்மோடு வாழ்ந்து மறைந்தவர் அமரர் மு. சுப்பிரமணியம். வழக்கம்பரை அம்மன் கோவில் வரலாற்றில் இவரது பங்களிப்பை மக்கள் மறக்க மாட்டார்கள்'' இவ்வாறு அமரர் மு. சுப்பிரமணியத்தின் நினைவையொட்டி நடாத்தப்பட்ட பிரார்த்தனை வைபவத்தில் கலந்து பேசுகையில் பண்டிதர் அ. ஆறுமுகம் குறிப்பிட்டார். திரு அ கந்தையா தலைமையில் பிரார்த்தனை நடைபெற்றது. சி மருதபிள்ளை நன்றியுரை கூறினார்.

## இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை தொகுதி அம்பன் விவசாயப் போதனாசிரியர் திருமதி தனவதி கந்தசாமி யாழ். விவசாயத்திணைக்களத்திற்கும், சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் திருமதி காங்கேஸ்வரி தனபாலசிங்கம் உடுப்பிட்டித் தொகுதி புலோலி விவசாயப் போதனாசிரியராகவும், புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. கிருஷ்ணபிள்ளை அம்பன் விவசாயப் போதனாசிரியராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## சங்கத் தலைவர்

(சுழிபுரம்)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்க புதிய தலைவராக திரு. வ. கிருஷ்ணசாமி (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்) ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஏனைய ஆறு உறுப்பினர்களும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பின்முற்றுக்கும் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

நடராசாவும் சபாநாதனும்,
மனுதாரரின்
சட்டத்தரணிகள்,
வட்டுக்கோட்டை.
தத்துவம்; 3938

வட்டுக்கோட்டை மேற்கைச்சேர்ந்த காலம் சென்ற கந்தையா மகள் மோகனசுந்தராம்பாள் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்.
கந்தையா கைம்பெண் சிவபாக்கியம் ''முருகன் நிலயம், வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.

மனுதாரர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு இம்மன்றில் மேற்சூறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரால் இந்த இலக்கத்தைக் கொண்ட ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு அதில் பின்முற்றுக்கும் கட்டளை பதியப்பட்டும் இருக்கிறமதென்றும்: இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆளெவரேனும் குறித்த மனுதாரருக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப் பத்திரம் மனுதாரருக்கு ஏன் வழங்கக்கூடாது என்று தகுந்த காரணம் எதுவும் இருப்பின் அவற்றை இம் மன்றில் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 14ம் திகதி காலை 9 மணிக்கு நேரடியாகத் தோன்றி தெரிவிக்கலாமென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

1986ம் ஆண்டு தை மாதம் 07ம திகதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
C 1168

## இராமகிருஷ்ண ஜயந்தி தினம்

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் ஸ்ரீஇராமகிருஷ்ணரின் 151வதுஜன்மதினவிழா கடந்த 12ம் திகதி நடைபெற்றது

எதிர்வரும் 16ம் திகதி ஸ்ரீ இராமகிருஸ்ணஜயந்தி விழா ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


## இம்முறை அமோக விளைச்சல்

[சுழிபுரம்]

பொன்னாலைப் பகுதியிலுள்ள வயல்களில் கடந்த காலங்களிலும் பார்க்க இவ்வாண்டு நெல் விளைச்சல் அதிகமாக அறுவடை செய்யப்பட்டுள்ளது. பெரும் மழை பெய்ததன் விளைவே இவ்விளைச்சல் என்று வயல்ச் சொந்தக்காரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்

அறுவடை முடிந்தவயல்களில்எள்ளு, பயறு விதைக்குமாறு பொது இயக்கங்கள் மக்களை ஊக்குவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



### மனவல் வின்சன்
(மனேன்)

பிறப்பு: 16-07-1939
அக்கிரமக்காரன் கையில்.
10-02-1986

மண்ணில் நீ வாழ்ந்த நாளில்
நம் கண்ணாய் இருந்தாய்
விண்ணில நீ சென்றாலும் நம்
கண்ணில் ஒளி ஆவாய்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்தில் 12-03-86 அன்று புதன்கிழமை பி. ப 5 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியில் பங்குபற்றி அவரின் ஆத்ம சாந்திக்காக வேண்டுர்படி கேட்டுக்கொள்கிறோம்

மனைவி,
அன்புச்சகோதரர்கள்,
மச்சாள்மார்.
மச்சான்மார்,
மருமக்கள்,
அன்ரிமார்.

3/3 அடப்பன் ரோட்,
யாழ்ப்பாணம். C 1164

## உலகச் செய்திகள்

### ஐ. நா. மனித உரிமைகள் குழுமுன்

# இலங்கை மீது பல நாடுகள் கண்டனம்

(ஜெனீவா)

**இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து, ஐ. நா. மனித உரிமைகள் குழு முன்னிலையில் இலங்கை அரசு, பலத்த கண்டனத்துக்குள்ளானது!**

**இலங்கையில் நிலவும் இனப் பிரச்னைக்கு ராணுவத்தீர்வு ஒன்றைக் காணமுயலாமல் அரசியல் தீர்வைக் காண முயற்சிக்குமாறு இந்தியாவும் வேறு பல முக்கிய நாடுகளும் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன.**

''இலங்கை அரசின் நடவடிக்கைகளின் விளைவாக இலங்கைத் தமிழ்ப் பிரஜைகளின் மனித உரிமைகள் பெருமளவுக்கு மீறப்பட்டுள்ளன'' என்று இந்தியப் பிரதிநிதி கலாநிதி ஜி. எஸ். டில்லோ ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ நா. மனித உரிமைகள் குழுக் கூட்டத்தில் கூறினர்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை விஷயம்குறித்து தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தனர்.

''மிகப்பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கும் யாழ்ப்பாணம் மீது விமானப் படையினர் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதாகக் கூறும் சமீபத்திய தகவல்கள் மிகுந்த வேதனை அளிக்கின்றது என்று கனடா பிரதிநிதி கூறினர்.

இலங்கை அரசிற்கும் பல் வேறு தமிழர் குழுக்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறச்செய்வதற்காக இந்திய அரசு செய்யும் முயற்சிகளை வரவேற்றதுடன் இந்தப் பேச்சுக்கள்தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

' இலங்கை அரசின் பாதுகாப்புப்படைகள் மனித உரிமைகளை மீறிவருகிறது'' என்று கவலை வெளியிட்ட பிரிட்டன், இந்தப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வைக்காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டது.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் தரமற்ற பழி வாங்கும் நடவடிக்கைகளை அயர்லாந்துநாட்டுப் பிரதிநிதி வன்மையாகக் கண்டித்தார்

இலங்கையில் சமீபத்தில் சீர்குலைந்துபோயிருக்கும் நிலைமைகுறித்து வெளியிடப் பட்டிருக்கும் விரிவான சர்வதேச ஏமாற்றத்தை தாமும் பகிர்ந்துகொள்வதாக அவுஸ்திரேலியா தெரிவித்தது.

அத்துடன் சமரசமும், மிதவாதமும்கொண்ட ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும் இலங்கை அரசுக்கு அவுஸ்திரேலியா ஆலோசனை வழங்கியது.

இலங்கையில் நிலவும் நிலைமை மிகமிகக் கடுமையானதாகத் தோன்றுவதாய் சர்வதேச வழக்குரைஞர்கள் கமிஷனின் தலைமைச் செயலர் கூறினர். (பி)

## பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் போர்க்கொடி

(டாக்கா)

''பங்களாதேஷில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நாடு தழுவிய ஹர்த்தாலில் பங்கு கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்ததன் மூலம் அந்நாட்டு மக்கள் தற்போதைய அரசையும், தேர்தல் நடத்துவதற்கான அதன் திட்டத்தையும் மீண்டும் நிராகரித்து விட்டார்கள்'' என்று 15 கட்சிக் கூட்டணிகளைக் கொண்ட அந்நாட்டின் பிரதான எதிர்த் தரப்பு தெரிவித்துள்ளது.

நடுநிலை அரசொன்றின் மேற்பார்வையின் கீழ் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த கூட்டணிகள் கோரிவருகின்றன. (பி)

## நிலாவெளியில் இடம்பெயர்ந்து கரவெட்டியில் தஞ்சம்!

[புலோலி]

அண்மையில் திரியாயில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களையடுத்து நிலாவெளிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள 20 குடும்பங்களைச் சேர்ந்த 100 அகதிகளையும் வதிரி கதிர்காம கோவிலடி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப் பேற்றுஅவர்களுக்கு கரவெட்டியில்அகதிகள் முகாமொன்றை அமைத்துள்ளது.

நிலாவெளியிலிருந்து இடம் பெயர்ந்த இக் குடும்பங்கள் வள்ளத்தில் முல்லைத்தீவிற்கு வந்து அங்கிருந்து பஸ் மூலம் கரவெட்டிக்கு வந்து சேர்ந்தனர்.

இவ்வகதிகளின் பரிதாபகர நிலைகுறித்து வதிரி கதிர்காம கோவிலடி விநாயகர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. கே. நாகேந்திரராசா, செயலாளர் த. தருமலிங்கம் ஆகியோர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரையின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்து, இவ் அகதிகள்முகாமிற்கு விஜயம் செய்த உதவி அரசாங்க அதிபர் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்க தான் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

தற்பொழுது இந்த 20 குடும்பங்களையும் சேர்ந்த சிறுவர்கள், இளம்பெண்கள், வயோதிபர்கள் உட்பட 100 அகதிகளுக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பொது மக்களின் உதவிகளுடன் உணவு உடுபுடவைகளை வழங்கியுள்ளனர்.

## ஜனதிபதியைச் சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அகதிகள் நிலைபற்றி திருமலை இந்து இளைஞர் குழு ஒன்று ஜனதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவைச் சந்தித்து தெளிவாக எடுத்துக் கூறவிருக்கின்றது. (க)

## அதிபர்கள் கூட்டம்

[மானிப்பாய்]

மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் கூட்டம் இம்மாதம் 14-ம் திகதி இணுவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி தனஞ்செயன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள விருக்கின்றார். கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரமும் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

## இவர்கள் முன்மாதிரி!

(வட்டுக்கோட்டை)

வட்டு-இந்துக்கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் அண்மையில் கல்லூரியில் இரத்த தானம் செய்தனர்

நெருக்கடியான் நிலைமைகளால் பாதிப்புறுவோர்க்குஅவசர சிகிச்சைகளின் போதுஉதவும் முகமாகவே இந்த இரத்த தானம் செய்யப்பட்டது இரத்த தானம் செய்ய முன் வந்த ஆசிரியர்களையும், மாணவர்களையும் வைத்திய சோதனைக்குட்படுத்திய வைத்தியர்கள் தகுதியானவர்களிடமிருந்து இரத்த தானத்தை ஏற்றுக் கொண்டனர்.

## விசேஷதூதர் ஆப்கான் விரைவு!

[இஸ்லாமாபாத்]

ஆப்கான் விவகாரங்கள் குறித்து ஐ. நா. தலைமைச் செயலரின் விசேஷ தூதர். இஸ்லாமபாத் வெளியுறவு அமைச்சருடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தினர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வது குறித்து காபுலுக்கும் இஸ்லாமாபாத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள தேக்க நிலையை தவிர்க்கும் நோக்குடன் இந்தப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன (பி)

## தூவானம்

காலை

9-30: இலங்கை - பாக். அணிகளுக்கிடையிலான 4வது ஒருநாள ஆட்டம்.

மாலை:

5-25 செய்திகள்

5-30: ''பிளக் டியூட்டியின் சாகஸம்''

6-00: எல்லாப் பயிற்சியும் வீணனதா?''

6-15: 'ரடடின் தொட்டின்'

6-30: செய்திகள் (தமிழ்)

6-55: 'பிரத்திபா' (இளைஞர் நிகழ்ச்சி)

7-25; சுட்ஸ் இன்கிறிடிபிள்

8-00: செய்திகள் (சிங்களம்)

8-20: 'தட்ஸ் இன்கிறிடிபிள் (தொடர்ச்சி)

9-00, செய்திகள் ஆங்கிலம்

9-20: இசை நிகழ்ச்சி

8-45: 'த சலிவன்ஸ்'

10-35: ஒளிபரப்பு முடிவு.

## இன்று இலங்கை வரும் நவசீன ஜனதிபதி



நவசீன ஜனதிபதி லிசின் நியன் தமது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு தமது பாரியார் லின்ஜியாமி சகிதம் இன்று இலங்கை வருகிருர். இவரை வரவேற்கும் முகமாகக் கொழும்பு விழாக்கோலம் பூண்டுள்ளது.

சீன ஜனதிபதி லிசின் நியன் பங்களாதேஷ், இலங்கை எகிப்து ஆகியவற்றுக்கான பயணத்தை மேற்கொள்ளுமுகமாகக் கடந்த சனிக்கிழமை 8ம் திகதி பீக்கிங்கை விட்டுப் புறப்பட்டார்.

இவரது இந்தப்பயணமானது கடந்த 8ம் திகதியிலிருந்து 14ம் திகதி வரை பங்களாதேஷ் இலங்கை ஆகிய நாடுகளுக்கு என்றும் பின்னர் 14ம் திகதியிலிருந்து 21ம் திகதிவரை எகிப்துக்கு என்றும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

சீன ஜனதிபதிதிரு. லிசின் நியனின் பங்களாதேஷ், இலங்கைப் பயணம் குறித்து கருத்துத் வெளியிட்டுள்ள மேற்கத்திய ராஜதந்திரவட்டாரங்கள், சீன ஜனதிபதியின் பங்களாதேஷ் இலங்கைப் பயணமானது 'ஆச்சரியமானதல்ல, என்று கூறியுள்ளதோடு, இவர் விஜயம் மேற்கொள்ளும் நாடுகளான இலங்கையும் பாகிஸ்தானும் சீனவுடன் நெருங்கிய தொடர்புவைத்துள்ள நாடுகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அததுடன், சீன யுத்தக் கப்பல்கள் முதன் முதலாக இவ்விருநாடுகளுக்கும் விஜயம் சய்தன. கடந்த டிசம்பர் மாதம் இந்த விஜயம் மேற் கொள்ளப்பட்டது, இந்த வழியில் அந்த யுத்தக்கப்பல் பாகிஸ்தானுக்கும் சென்றது என்று அந்த ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை ஜனதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன 1984 மே மாதம் சீனவுக்கான விஜயத்தையும், பங்களாதேஷ் ஜனதிபதி ஜெனரல் எர்ஷாத் கடந்த யூலை மாதம் சீனவுக்கான விஜயத்தையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்திய எல்லைக்கு அண்மையில் உள்ள இலங்கை பங்களாதேஸுடன் சீன பாரம்பரிய நட்புறவு கொண்டுள்ளது தெரிந்ததே, ஒரு காலகட்டத்தில் சீன-இந்திய உறவுகள் முற்ருக சிதைந்திருந்த வேளையில், இலங்கையின் கடற்படையைக் கட்டியெழுப்ப சீனமிகுந்த உதவியை அளித்தது.

இதேபோல் 1975ம்ஆண்டு பங்களாதேஸுக்கான இராணுவ உதவிகளை சோவியத் யூனியன் முற்ருக நிறுத்திக்கொண்டபோதும் பங்களாதேசுக்கு தேவையான உதவியை சீன வழங்கத் தவறவில்லை.

திரு. லிசின் நியனின் எகிப்திய விஜயம்குறித்து கருத்து வெளியிட்டுள்ள எகிப்திய இராஜிய வட்டாரங்கள், வெளிநாட்டமைச்சர்கள் மட்டத்திலான வழமையாக நடத்தப்படும் இரு நாட்டுக்குமிடையிலானஒரு ஐக்கிய உறவுடனன பேச்சுவார்த்தையும் பொருட்டே அவரது விஜயம் அமைந்துள்ளதாக கூறுகின்றன.

இதேநேரம் ஜனதிபதி திரு. லிசின் நியன், ஈரான்-ஈராக் யுத்தத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொள்வார் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிருர்கள். இவரது எகிப்துக்கான பயணம் யாசீர் அரபாத்தின் தலைமையிலான பாலஸ்தீன விடுதலைஇயக்கத்துக்கு சீனவின் ஆதரவை உறுதிப்படுத்துவதாகும் என்று நம்பப்படுகிறது.

இருதரப்பு வர்த்தக விடயங்கள் பற்றியும் இந்த விஜயத்தின் போது ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீன 75 சத வீதமான பொருட்களை இரு நாடுகளுக்கிடையிலும ஏற்றுமதி செய்கிறது.

சீன-எகிப்து இராணுவக் கூட்டு உறவுகள் 1973ம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்திற்குப்பின் மிகவும் சுறுசுறுப்பாக இராணுவ ஒப்பந்தத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன. இச் சந்திப்புக்களின் போதும் இவ்விடயம் குறித்தும், இராணுவ ஆயுத உற்பத்தி, ஆகாய எல்லைப் பாதுகாப்பு ஆகியன குறித்து விரிவாக ஆராயப்படும் என்று எகிப்பை இராஜிய வடடாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஜனதிபதி லிசின் நியன் இதைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தையும் மேற்கொள்ளவுள்ளார். இம்மாதம் 21ம் திகதி தொடக்கம் 25ம் திகதிவரை சோமாலியாவுக்கும் 25ம்திகதி தொடக்கம் 30ம்திகதிவரை மடகஸ்காருக்கும் செல்லவுள்ளார்.

இவரது சோமாலியப் பயணமானது, சோவியத் யூனியன் எத்தியோப்பியா மீது வைத்துள்ள தன்னதிக்கத் தன்மைக்கு மறைமுகமான சமப்படுத்தும் நோக்கிலானது என்று கருதப்படுகிறது.

இதேவேளை சீன உயர் அதிகாரியொருவர் மடகஸ்காருக்கு மேற்கொள்ளும் விஜயம் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: ஆர் பிரபா

## மணிவாக்கு

கலைகள் யாவும் முடிவில் கடவுளின் பெருமையையே விளக்குகின்றன. எனவே கற்கவேண்டிய முறையில் கலையைக் கற்ருல் மெய்ப்பொருளை அடைவதற்கு அது உபாயமாகும்.

— அருள்விருந்து.

## நமது நோக்கு

# சித்திரத்துக்கு சுவர் வேண்டும்

'திட்டிப்பேச ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்று சொல்வார்கள்.

இந்திய பாராளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் வாயில் வந்ததையெல்லாம் பேசிவிட்டார் இதற்கொரு 'டோஸ்' கொடுக்கவேண்டுமென்பதே இலங்கை அரசும் அதற்கு வாலுருவும் பத்திரிகைகளும் எடுத்த சபதம்.

இந்த 'டோஸ்' தான் இலங்கை அரசு அனுப்பிய அறிக்கை. ''இலங்கையில் இன்று நடப்பது இனக்கொலை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சொல்லிவிட்டாரென்பதே இந்த சீற்றத்தின் முக்கிய காரணமாகும்.

இதுகாறும் உலகில் பல நாடுகள், தமிழர்கொலையை இனக்கொலை என்று வாய் கூசாமல் கூறிவந்திருக்கின்கின்றன. அவுஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ஹேடன் இதனைத் தென் ஆபிரிக்காவுக்கு ஒப்பிடவில்லையா? எனவே படுமோசமான இக்காலத்தில் இந்திய அரசு பன்முறை கவலை தெரிவித்தபோதும் அதனை பரவாய்பண்ணுத இலங்கை அரசுக்கு, ஒரு சவால் எழுந்தது பேராவேசம்!!

அடிக்க அடிக்க அம்மியும் நகரும்; இந்திய அம்மி இன்னும் எத்தனையோ அடிகளைத் தாங்கவல்லது; ஆனுல் இலங்கை அரசின் ராஜதந்திர பேணு அளவு கடந்து வசைபேசத் தொடங்கிவிட்டது.. மட்டுப்படுத்தும் அவசியம் ஏற்பட்டது.

''கரும்பிருக்க இரும்பு கடித்தவாறு'' இன்சொலால் உறைப்பாக உறுதியாக எடுத்துச்சொல்லும் ஆற்றல் அற்றவர்களே கொடுஞ்சொல் கூறுபவர்கள். இது அறியாமையின் கொடுமை என்பது கருத்து.

இன்று இலங்கை அரசு அதற்குப் பெற்றிருக்கும் பதில், ''துள்ளாதே தம்பி துள்ளாதே'' என்ருெரு பாட்டின் பாணியில் அமைந்திருக்கிறது.

1983 முதல் இன்று வரைக்கும் இந்த நெருக்கடியைத் தீர்த்துவைக்க பகிரதப் பிரயத்தனம் செய்துவரும் பாரதத்துக்கு இன்றுதான் 'கோபம்' என்ருெரு குழப்ப நிலை காணப்படுகிறது.

இந்திய பதிலில் காணப்படும் ஒருபகுதி, குற்றங்களை, கண்டனங்களை எவ்வாறு குணம்தோல் எடுத்துரைக்கலாமென்பதைக் காட்டுகின்றது,

''நீ கழுத்தை அறுக்கிற கழுதை என்று சொல்வதை விட்டு இந்தியாவுக்கு எதிரான இந்தக் குற்றச் சாட்டுகளையும், குறிப்பாக மேற் சொல்லப்பட்ட குறிப்பின் உள்ளடக்கத்தையும் கருத்தில் கொண்டு நோக்கும் போது, ஆக்கபூர்வமான பேச்சுகளில் தவறியமைக்கு ஒரு நொண்டிச்சாட்டு தேடும் முயற்சியாகவே இந்திய அரசுக்குத் தோன்றுகிறது'' என்று இந்திய அறிக்கை குறிப்பிடுகிறது.

நொண்டியைப் பார்த்து உன்னுல் வேகமாக நடக்க முடியவில்லையே என்று கர்ச்சிப்பது, ராஜதந்திரத்தின் 'ஏ. பி. சி.' தெரியாதவரின் செயல்

அந்த அறிக்கையில் இன்னொரு பந்தியைப் பார்ப்போம்: ''இலங்கையில் தொடரும் வன்செயலுடன் முற்றிலும் தேவையற்றதும் அர்த்தமற்றதுமான சிவிலியன்களின் கொலைகளும், சொத்தழிவும் காரணமாக, இச்செயல்கள் எதுவித முன்னேற்றமும் காணுததுடன் ஒரு பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தி விட்டது'' இந்தக் கண்டிப்பில் தேவையற்ற கொடுஞ்சொல் எதுவும் கிடையாது. அதேசமயம் ''பாரிய தாக்கம்'' யாருக்கு ஏற்படுத்தி விட்டதென்பதைக் குறிப்பிடாதுவிட்டதே இந்தியாவின் பலத்துக்கு ஒருபெரும் அறிகுறியாகும்.

இன்று இலங்கையில் நடப்பதும், இதுகாறும் நடந்து வந்ததும் என்ன என்பதைத் தெளிவாகவும் திடமாகவும், அதன் எதிர்கால விளைவு எவ்வாறிருக்குமென்பதைக் காரசாரமாக, அதே சமயம் பண்புடன் தெரிவித்த முதலாவது இந்திய அறிக்கை இதுவெனலாம். பொறுமைக்கும் எல்லையுண்டு.

''இலங்கையில் நடப்பது இனக்கொலை போல் தெரிகிறது'' என்று சொன்ன வெளியுறவு அமைச்சர், இன்று அந்த நாட்டில் எவரும்பாதுகாப்பாக வாழ்வது கேள்விக்குறி என்று கருதியதால் இந்திய கிரிக்கெட் குழு இலங்கை செல்வது உசிதம் அல்ல எனக் குறிப்பிட்டிருந்தார். அரசின் சார்பில் விடுத்த இந்த எச்சரிக்கை இந்திய தேசிய கிரிக்கட் சபையைச் சட்டரூபமாகக் கட்டுப்படுத்தாது எனினும் அது ஒரு பொறுப்பற்ற எச்சரிக்கை அல்ல.

'ஆகா! இதென்ன! இதுவும் கிரிக்கட்டா?'' என்று அலறுகின்றன கொழும்பில் வெளியாகும் ஆங்கில தினசரிகள்! இன்று இவை தினசதிகள்!

எத்தனையோ கிண்டல்கள் மத்தியில் சென்ற வருடம் நடந்த இலங்கை-இந்திய டெஸ்ட் விளையாட்டில் இலங்கையின் வெற்றியை நாம் பாராட்டினேம்; இன்றைய சூழ்நிலை வேறு.

இன்று இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் ஆதாரமற்ற அவதூறைப்பொருட்படுத்தாது இந்திய கிரிக்கட்குழு இந்தக் கொண்டாட்டத்தில் விரைவது நாகரிகச் செயலா? கிரிக்கட்டா? அபாயத்துக்கு இடமளிக்கும் நிகழ்ச்சியல்லவா?

# நெல்லியடியில் உபகல்வி அலுவலகம்

(புலோலி)

''யாழ் மாவட்ட கல்வி அபிவிருத்தியைப் பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள மூன்று கல்வி அலுவலகங்களில் ஒன்று நெல்லியடியில் நிறுவப்படும். இப்பகுதிகளில் கல்வி சம்பந்தமான சகல நிர்வாக நடவடிக்கைகளும் இவ்வுபகல்வி அலுவலகத்தாலேயே மேற்கொள்ளப்படும். இவ்உபகல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரிஉட்பட இப் பகுதிகளின் வட்டாரக் கல்வி அதிகாரிகளும் கடமையாற்றுவார்கள்''

இவ்வாறுநெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில்சுமார் இரண்டுலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் பிரிவு கட்டிடத்திறப்பு விழாவிலும், பாண்ட் வாத்தியக் கருவிகள் கையளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வலயப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கூறினுர். வித்தியாலய அதிபர் திரு எஸ். ஸ்ரேய்காந்தராஜ் விழாவிற்குத் தலைமை தாங்கினுர்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. சிமியாம்பிள்ளை தமதுரையில்; இன்று இங்குதிறந்துவைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் இரண்டாம் கட்டவேலைகளுக்கென இவ்வருடம் மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல்லியடி மகாவித்தியாலய பெண்கள் பிரிவை இப் பகுதிக்கான தனியான பெண்கள்கல்லூரியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப் பகுதியில் பெண்கள் கல்லூரி ஒன்றில்லாதது பெருங்குறைபாடாக உள்ளதென்பதனுலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது'' என்ருர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வித்திணைக்கள உடற்கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா தமதுரையில்; ''நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்திய கருவிகள் இதுவரை கிடைக்காமல் இருந்தது பெருங் குறைபாடாக இருந்தது இக்குறைபாட்டைக் கல்வித்திணைக்களம் தற்போது நீக்கியுள்ளது. வடமராட்சிப் பகுதியிலிருந்து கல்வித்திணைக்களத்தால் பாண்ட்வாத்தியக் கருவிகளைப் பெற்றுக்கொண்ட ஒரேயொரு வித்தியாலயம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமேயாகும்'' என்ருர்.

''உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு கே ஈசுரபாதம் தமதுரையில்; ''பாடசாலைகள் அபிவிருத்தியடையவும், மாணவர்களின் கல்வித்தரம் உயர்வடையவும் ஆசிரியர்களும், பெற்ருேர்களும் இணைந்து செயற்பட வேண்டியது முக்கியமாகும்'' என்ருர்.

## வால் வெள்ளி தெரிகிறது!

கடந்த சில மாதங்களாகப் பேசப்பட்டு வரும் ஹலியின் வால் வெள்ளி இப்போது எல்லோராலும் மிகவும் இலகுவாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதிகாலையில் 3 மணியளவில் கிழக்கில் அடிவானத்தில் உதயமாகும் இவ் வால் வெள்ளி சிறிது சிறிதாக மேலே வந்து சூரியோதயம்வரை காட்சியளிக்கும். ஒரு கருவியின் உதவியுமில்லாமல் வெறுங் கண்ணுற் காணக் கூடியதாகவிருக்கும் இதனைக் காலை 5 மணியளவில் அடிவானிலிருந்து முப்பது பாகை உயரத்திற் காணலாம். ஒரு சிறு தொலைநோக்கி மூலம் இது மிகவும்தெளிவாகத்தெரியும். அதன் வால் சூரியனுக்கு எதிர்த் திசையில் அதாவது மேல் நோக்கி நீண்டிருக்கும்.

மகர ராசியில் இப்போதுள்ள இவ் வால்வெள்ளி இன்னுஞ் சில நாட்களில் தனுராசியில் பிரவேசித்து ஏப்றில் மாதத் தொடக்கத்தில் விருச்சிக ராசிக்குட் செல்லும். எனவே இன்னுஞ் சில வாரங்களுக்கு இதனைத் தொடர்ந்து காலையிற் பார்க்கலாம். 76 வருடங்களுக்கு ஒரு முறை தெரியும் இவ் வால் வெள்ளியை இப்போது பார்க்கும் சந்தர்ப்பத்தை எல்லோரும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

டபிள்யு. எஸ்.
செந்தில்நாதன்.

# மிகச்சிறந்த கம்யூ. நாடாக சீனு திகழும்

## மக்கள் கருத்து

உங்களுடைய 7-3-86 இதழில் வெளிவந்த திரு. வீ சின்னத்தம்பி அவர்கள் எழுதிய ''சீனு மாறிவிட்டது?'' என்ற கட்டுரை மிகவும் பிழையான கருத்துக்களையும் தற்போதைய சீன ஆட்சியின் மீது அபாண்டமான பழி சுமத்தல்களையும் கொண்டுள்ளது. தற்போது சீனவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நான் இது பற்றிய சில விளக்கங்களை வாசகர்களுக்கு அளிக்க விரும்புகின்றேன்.

முதலாவதாக சீனு எப்பொழுதும் சிவப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சீனுவில் கலாசாரப் புரட்சி ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. ஆனுல் கலாசாரப் புரட்சி என்பது என்ன? அந்தக்காலகட்டத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை முதலாவதாக வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சீனுவின் முன்னுள் உபதலைவர் திரு. லியூஷாசீக்கு கலாசாரப் புரட்சியின்போது என்ன நடந்தது. அதாவது இன்றைய காலகட்டத்தில் சீனுவில் மட்டுமல்ல சோவியத் யூனியன் உட்பட எல்லா கம்யூனிஸ்ட் நாடுகளிலும் உலகளாவிய கருத்துக்கள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனுல் இந்தக் கலாச்சாரப் புரட்சியில் அவருக்கு என்ன நடந்தது? அவர் அகௌரவப்படுத்தப்பட்டார். கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவியில் இருந்தும் அகற்றப்பட்டார். துன்புறுத்தப்பட்டார். இறந்தார். மார்ஷல் பெங்டஹோய் என்று ஒரு விடுதலை போர் வீரர் சீனுவின் புரட்சிகரப் போரில் சீன விடுதலை மக்கள் ராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்தவர். கொரியப் போரில் சீனத்தொண்டர் ராணுவத்துக்குத் தளபதியாக இருந்தவர். பின்பு சீனமக்கள் குடியரசின் பாதுகாப்பு அமைச்சராக விளங்கியவர். ஏறத்தாள நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சீனநாட்டின் விடுதலையில் தன்னை முற்று முழுதாக இணைத்துக் கொண்ட வீரமகன். கலாசாரப்புரட்சியின் போது எவ்வாறு துன்புறுத்தப்பட்டார். கட்சி உறுப்பினர் பதவியை இழந்தார். இறந்தார். மார்க்ஸீயத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாதவர்கள்ஒருமாபெரும் வீரனின் இறப்புக்குக் காரணமானுர்கள்.

இதுமட்டுமல்ல கல்வி கற்ற அத்தனை புத்திஜீவிகளும் துன்புறுத்தப்பட்டார்கள். பாடசாலை அதிபர்கள் மாணவர்களாலேயே பெல்ட்டால் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள். நூலகங்கள் பெறுமதி வாய்ந்த விஞ்ஞான ஆராய்ச்சிப் பொக்கிஷங்கள் எரித்து நாசமாக்கப்பட்டன. சரித்திரப் புகழ்வாய்ந்த, சீனக் கலாசாரத்தின் பெறுமதி வாய்ந்த கருவூலங்கள் அனைத்தும் நாசமாககப்பட்டன.

கலாசாரப்புரட்சி முடிவு பெற்று, லின்பியா மாசேதுங் மனைவியார் தலைமையிலான ''நால்வர்குழு'' அகற்றப்பட்டபோது சீனநாட்டின் பொருளாதாரநிலை என்ன? சிலகூட்டுறவு கம்னியூஸ்களின் கருவூலத்தில் யுவான் கூட கையிருப்பில் இருக்கவில்லை. மக்களுக்கு உண்ணப் போதுமான உணவில்லை. உடுக்க உடையில்லை. புதிதாகத் திருமணம் முடித்த இளம் குடும்பங்கள் சீவிக்க வீடுகள் இல்லை. மார்க்ஸீய சித்தாந்தத்தின் பெறுபேறுகள் இவைதானு? இல்லை. மார்க்ஸின் பெயரைச் சொல்லி வயிறு புடைத்தவர்களின் அதிகாரத்தில் தான் இந்த அநியாயங்கள் நிகழ்ந்தன. அன்று சீனுவில் உற்பத்தியிலிருந்த 'பிளெயிந் பிஜியன்' ''போணிக்ஸ்,' சைக்கிள்களை உள்நாட்டிலேயே விற்கமுடியாதிருந்தது.

ஆனுல் இன்றுள்ள நிலைமை என்ன? சீனுவில் 'போனிக்ஸ்' சைக்கிள்சள் வாங்க மூன்று வருடம் காவலிருக்க வேண்டும். சீனக்கார்களான ''ஷாங்காய்'' செங்கொடி'' ஆகியன தற்போது ஜெர்மனியின் ஒத்துழைப்புடன் செய்யப்படும் 'ஃபாக்ஸ்வகன்'' கார்கள் அங்கு அமோகவிற்பனையாகின்றன. கலாசாரப்புரட்சி முடிந்தபோது சீனுவில் ஓடிய ரயில் எஞ்சின்கள், யப்பானிய எதிர்ப்பு யுத்தத்திற்கு முற்பட்ட நிலக்கரி எஞ்சின்கள் தான் ஆனுல் தற்போது வெளிநாட்டில் தயாரான எஞ்சின்கள் ஓடுவதோடு அந்த எஞ்சின்கள் சீனுவில் வெளிநாடுகளின் சம பங்களிப்போடு தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவைஎல்லாம் எதற்காகச் செய்யப்படுகின்றன சீன தொழில் நுட்ப வல்லுனர்கள், வெளிநாட்டு வல்லுனர்களிடம் இருந்து சிறந்த தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான். இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான்.

மக்கள் நன்கு உண்ண வேண்டும், உடுக்க வேண்டும், வீட்டு வசதிகளை, தொழில் வாய்ப்புக்களைப் பெற வேண்டும். என்ற காரணத்துக்காக, அதாவது கம்யூனிஸ சித்தாந்தத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து விடாதிருக்க வேண்டும் என்ற காரணத்துக்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் தான் இவை.

(7ம் பக்கம் பார்க்க)

## "தூக்குத் தண்டனைக் கைதியின் மனோநிலையில் வாழ்கிறார்கள்"

(ஐ சண்முகலிங்கம்)

"பாதுகாப்பு வலயத்தில் வாழ்பவர்கள், தூக்குத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கைதிபோன்ற மனோநிலையிலேயே வாழவேண்டியுள்ளார்கள். தூக்குத்தண்டனைக்குரிய கைதி 'தனக்கு தூக்கு நிச்சயமாகிவிடுமா?, அல்லது விடுதலை கிடைக்குமா? அல்லது சீவியகாலச் சிறை கிடைக்குமா? அல்லது சிறையை உடைத்துக்கொண்டு போகவா என்று பலவாறும் நினைப்பான். ஆனால் நாங்கள் தப்பி ஓட விரும்பவில்லை. தீர்வைக்காணவே விரும்புகின்றோம்."

இவ்வாறு நேற்றுப் பிற்பகல் யாழ். கிறிஸ்தவ யுவதிகள் சங்கத்திற்குரிய (வை. டபிள்யு. சி ஏ.) தலைமைக்காரியாலயத் திறப்பு விழாவில் பேசுகையில் பிஷப் அம்பலவாணர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கனேடிய தூதர் திரு டி.எம். கொலகொட் அவர்கள் காரியாலயக் கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

கிறிஸ்தவ யுவதிகள் சங்கத் தலைவி திருமதி எஸ். யேசுராசன் தலைமையில் இவ்விழா றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை அவர்கள், யாழ். அரசாங்க அதிபர் திரு. மு.பஞ்சலிங்கம். யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். [ஐ]


### கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

பஞ்சாங்கம் விற்பனையாகிறது. 86/87க்கான க்ஷய வருஷ இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கம் விலை ரூபா 16/- திருக்கணிதம் விலை ரூபா 15/-. வியாபாரிகட்கு கழிவு. V. P. P. உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [A 1160]

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் நல்ல சுற்றாடலில் பிரயோசனங்களுடனும் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு பரப்புக் காணி, இரண்டு படுக்கை அறைகள் கொண்ட சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- Mrs M. Ramanathan, Late Proctor N. Nagalingam J P. அடைக்கலன் தோட்டம், வட்டுக்கோட்டை. (C 1167)

### வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ And ரீ வி. மோட்டார் மெக்கானிசம், சுருக்கெழுத்து 4 தட்டெழுத்துபுதிய பிரிவுகள்ஆரம்பம்:- 15-03-86 கட்டணம் மிகக் குறைவு. சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். VISPA ENGINEERING, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (A 1174)

### தவறிவிட்டது

இல 623381293V இரத்தினம கிருஷ்ணனந்தன், வராலி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஸ்ரான்லி பேணிச்சர் பலஸ், ஸ்ரான்லி ரேட், யாழ்பாணம். (C1169)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30
RAMBO
அதிரடித்தாக்குதல்படம்

LIDO Jaffna
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


### பறயனாலங்குளம்--

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

அகதிகளான குடும்பங்களுக்கு வவனியா அரச அதிபரும், செயலக தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரியும் முகாம்கள் நிறுவியுள்ளனர்.

ரம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்திலும், வேப்பங்குளத்திலுமுள்ள பழைய அகதிகள் முகாமிலும் அகதிகளுக்குப் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்கநேற்றும் மூன்று இளம்பெண்களும், வயோதிபர்களும் உட்பட 10 பேருக்குமேல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக இராணுவமுகாம் அமைக்கப்பட்டதைத்தொடர்ந்து நேற்றும் வவனியா-மன்னார் போக்குவரத்துச்சேவை நடைபெறவில்லை. நேற்றிரவு இம்முகாம் பகுதியில் துப்பாக்கிச்சூடும், குண்டுகள் சத்தமும் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போராளிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேரடி மோதல் இடம்பெற்றதாகவும் ஒரு தகவல தெரிவிக்கிறது. [மா]


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

**மலிவு விற்பனை இரும்புப் பொருட்கள்**

இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்கள், பாவனையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

10-3-86 தொடக்கம் இல 115 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எமது சங்க கிளையில் சகல இரும்புப் பொருட்களும் கொள்விலைக்கு விற்பனை செய்துவருகின்றோம். வர்த்தகர்கள், பாவனையாளர்கள் தமக்குத் தேவையான இரும்புப்பொருட்களை மேற்படி எமது கிளையில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
127, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
09-3-86.

(A 354)


## உடும்பன்குளம் படுகொலை: சாட்சிகளை ஆஜர் செய்ய பிரஜைகள்குழு மறுப்பு!

[மட்டக்களப்பு]

உடும்பன்குளம் படுகொலை சம்பந்தமான சாட்சிகளைப் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவிடமோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமோ ஆஜர்செய்வதில்லை என்ற முடிவை அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவினர் கல்லடி இணைப்பதிகாரி மக்ஸி பெரேராவிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. எம் ஐ. அகமது லெப்பையும்; உப தலைவர் சிவஸ்ரீ சிவஞானசெல்வக் குருக்களும் கல்லடி முகாம் இணைப்பதிகாரியைச் சந்தித்தபோதே இந்தமுடிவு வலியுறுத்தப்பட்டது.

இப்படுகொலை சம்பந்தமான சாட்சியங்கள் அடங்கிய புத்தகங்களுடன் லிகிதரை கல்லடி முகாமுக்கு வருமாறு இணைப்பதிகாரி பெரேரா பணித்திருந்தாராம். இதன்படி இவர்கள் இருவரும் இணைப்பதிகாரியைச் சந்தித்தனர், ஆனால் சாட்சிப் புத்தகத்தையோ, லிகிதரையோ ஆஜர் செய்யவில்லை

சாட்சிகளை எக்காரணம் கொண்டும் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக்கொண்ட குழுவிடம் ஆஜர்செய்வதில்லை என்ற அக்கரைப்பற்று, மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினரின் முடிவுக்கிணங்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்கள் படும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாகச் செவிமடுப்பதாகக் கனடா உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் இச்சந்திப்பு இடம்பெற்றது, பிரஜைகள் குழுவின் இணைப்புக குழுத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நேற்றுப்பிற்பகல் நடந்த இந்தச் சந்திப்பு ஒன்றரை மணிநேரம் இடம்பெற்றது,

கனடா உயர் ஸ்தானிகரை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வரவேற்றார்.

இச்சந்திப்பின்போது வண. பிதா மைக்கல்சாமி, வண. பிதா தேவராஜன், யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், அன்னையர் முன்னணியினர், அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினர் பங்குபற்றினார்கள். கனடா ஸ்தானிகருடன் தூதரக அபிவிருத்தி ஆலோசகர் திரு. ஜோன் சிம் கிளியரும் வந்திருந்தார்.

இங்குள்ளநிலைமைகளை பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் விரிவாக எடுத்துக்கூறினார்கள்.

தமிழ்ப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளபிரச்னைகள் பற்றி தனித்தனியாக எடுத்துக்கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட முல்லைத்தீவு, வவனியா, மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை பிரதிநிதிகள் அங்குள்ள பாதிப்புகள் பற்றி விளக்கினார்கள்

கொக்கிளாயில் மீண்டும் நீர்கொழும்பு முகாமிலிருந்து சுமார் 350 சிங்களகுடும்பங்கள் பாதுகாப்புடன் குடியேற்றப்பட்டிருப்பதாகவும், அதேசமயம் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள் மீண்டும் குடியேறத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும், கொக்கிளாய் தடைசெய்யப்பட்ட பிரதேசம்எனக் காரணம்காட்டப்படுவதாகவும்,முல்லைத்தீவிலிருந்து வந்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாகக்கூறப்பட்டது

அகதி முகாம்களில் தமிழ் அகதிகள் உணவின்றி, உடையின்றித் தவிப்பதாகவும், சிறுவர்கள் பாடசாலை செல்லமுடியாது கல்வி வசதியின்றி இருப்பதாகவும் குழந்தைகளுக்குப் பால்மா, மருந்துகள் கிடைப்பதில்லை என்றும அகதிகள் சார்பில்தெரிவிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது,

தினமும் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் ஒருவரை இழந்து வருவதாகவும், விதவைகள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் வயோதிபத் தாய்மார்கள், சிறுமிகள் பெண்கள் பலியாகியும் தாக்குதலால் காயமடைந்து வருவதாயும் அன்னையர் முன்னணியினர் தெரிவித்தனர்.

1000 மீற்றர் பாதுகாப்பு வலயம், விமானத் தாக்குதல், கடல் வலயத்தினால் கடற்றொழிலாளர் பாதிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் எடுத்துக்கூறப்பட்டன. [க]

### நொச்சிமுனை—

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

னர். 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆரையம்பதியைச் சேர்ந்த உதயா மோட்டர்ஸ் உரிமையாளரான கருணாரட்ண (55-வயது) என்பவர் சென்ற கார் கடத்தல் முயற்சி சம்பவம் தொடர்பாக இத்தேடுதல் நடவடிக்கைஇடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. [மா]

### திருமலையில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களுள் 6 பேர் சிங்களவர்கள் என்றும் இருவர் தமிழர்கள் என்றும் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த மூவரும் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படுகொலைச் சம்பவத்துக்குக் காரணமான சூத்திரதாரிகள் யாரென இதுவரை அறிவிக்கப்படவில்லை [மா]

### முதலில்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வராவிடின் இந்தியா இலங்கையுடன் கொண்டுள்ள அரசியல் உறவை முறித்துக்கொள்வதுடன் பொருளாதார உறவுகளையும் துண்டித்துக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்று ஈழத்தமிழர்களைப் பாதுகாப்பது என்றும் திரு மு. கருணாநிதி கூறினார்.

ஜனதாக்கட்சி தமிழ்நாடு செயலாளர் இரா செழியன் பேசுகையில்; இலங்கையில் தமிழர்கள் படுகொலைசெய்யப்படுவதற்கு எதிராக உலகநாடுகளின் ஒருமித்த கருத்தைத் திரட்ட மத்திய அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் இலங்கைக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (ச)

## குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறி

[வண்ணார்பண்ணை]

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் குறுகியகால விவசாயப் பயிற்சிநெறி சித்திரை மாதம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக நிலையத்தின் பயிற்சிப் பிரிவு உத்தியோகத்தர் திரு. பி. இராமநாதன் தெரிவித்தார்.

இரண்டு மாத காலத்திற்கு நடத்தப்படும் இக்குறுகிய காலப் பயிற்சித் திட்ட நெறியில் 25க்கு மேற்பட்ட பெண்கள் தெரியப்படவுள்ளனர்

வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு, கால்நடைகள் பராமரித்தல், நாற்று மேடை அமைத்தல் உபஉணவுப் பயிர்ச்செய்கை, பழமரப் பயிர்ச்செய்கை, நோய்களைக் கட்டுப்படுத்தல், வீட்டு விஞ்ஞானம் குழந்தைகள்பராமரிப்பு, கைப்பணி ஆகிய பயிற்சிகளும்இடம் பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிலைய முகாமையாளர் பி, தருமலிங்கம் செய்துள்ளார்,

### காட்டில் --

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வான் பிராமணாளம் குளம் காட்டினுள் அனாதரவான நிலையில் காணப்பட்டதாக அவ்வூர் வாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

பிந்திக் கிடைத்த தகவலின்படி காணாமல்போன ஒன்பது பேரும் வன்னி ஆயுதப்படை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்எனத் தெரியவந்துள்ளது. (மா)

### வெளிநாட்டவர்க்கு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இவ்வாறான எச்சரிக்கை இலங்கை வெளிநாட்டு விவகார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ளது

போலி விசாக்களுடன் ஆப்கானிஸ்தானிலிருந்து 36 பேர் இலங்கைக்குவந்து, அவர்களில் 31 பேர் உடனடியாக நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே இலங்கை வெளிநாட்டமைச்சு உஷாராகியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் மூன்று ஆப்கானியர்கள் போலி விசா'வுடன் இலங்கை வந்துள்ளரெனவும் அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. ஷ]

### பார்த்தசாரதி—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சஞ்சிகை வெளியிட்டுள்ள செய்தியில் திரு ஜி. பார்த்தசாரதயின் ராஜினாமா வானது உண்மையானதென்றும். ஆனால் இந்தியா இலங்கை விஷயத்தை ஏற்கமறுத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

"வெளிவிவகார கொள்கை விஷயங்களில் திரு பார்த்தசாரதி விலக்கிவைக்கப்பட்டுள்ளார் கடந்த நான்கு மாதத்தில் ஒருமுறைகூட அவர் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசவில்லை. முக்கியமாக இலங்கை விவகாரங்கள் பற்றிக்கூட பத்திரிகை மூலமாகவே அறிந்துள்ளார்' என்று 'இந்தியா ருடே' சஞ்சிகை தெரிவிக்கிறது. (பி)

## கைதான 6 பேரில் மூவர் விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பாடுமீன் வீதியில் நேற்று முன்தினம் காலை வீடொன்றை முற்றுகையிட்ட அதிரடிப் படையினர் வீட்டிலிருந்த கணவன், மனைவி உட்பட ஆறுபேரைக் கைதுசெய்து கல்லடி முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் அதேநாள் மாலை கணவர், மனைவி, மகன் ஆகிய மூவரும் விடுதலைசெய்யப்பட்டனர் ஏனைய மூவரும் தொடர்ந்தும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# நாட்டில் தர்மம் அழிய அரசியல்வாதிகளேகாரணம்!

## சர்வோதயத்தலைவர் கருத்து

(வவனியா)

''நம்நாட்டு அரசியல்வாதிகளை நமது மக்கள் நம்பி இருந்தார்கள். இதனாலேயே தர்மசக்தியும், ஜனசக்தியும் மறைந்துபோயின. நாடு இந்தளவு கஷ்டமான சூழ்நிலைக்கு போனதற்கு அரசியல் கட்சிகளே காரணமாகும்.''

இவ்வாறு மூன்றுமுறிப்பு சர்வோதய மத்திய நிலையத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ண தெரிவித்தார். கடந்த மாதம் இறுதியில் நடைபெற்றஇக் கூட்டத்தில் அவர், மேலும் கூறியதாவது ''நமது நாடு கடந்த 50 ஆண்டு காலமாக மூடத்தன்மையில் வளர்ந்துள்ளது. மூடத் தன்மை வளர வளர தமிழர்களும் சிங்களவர்களும் தமக்கு தாமே முத்திரை ஒட்டிக் கொண்டுள்ளார்கள்.

மனோதர்மநீதி, தர்மநீதி, மக்கள்நீதி, ராஜநீதி ஆகிய நீதிகள் இப்போது மக்களுக்கு புரியவில்லை.

''வடபகுதியில் போராடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் மரணிப்பதை அவர்களின் பெற்றோர், சகோதரர்கள் விரும்பவில்லை. அதைப்போன்றுதான் படைவீரர்களுடைய பெற்றோரும் தமது புதல்வர்கள் இறப்பதை விரும்பவில்லை'' என்று கூறினர்.

## ஒய்வுபெற்றுள்ளார்



மானிப்பாய்அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்த டாக்டர் பொ. சிவகணேசமுருகமூர்த்தி தமது 38 வருட சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

கண்டி, அநுராதபுரம், கதிர்காமம், பதுளை ஆகிய இடங்களில் பணிபுரிந்த இவர், 1979ம் ஆண்டுமுதல் 1986ம் ஆண்டுவரை மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றினர்.

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை செயலாளராகவும் உடுவில் முருகமூர்த்தி கோவில் பரிபாலனசபை பொருளாளராகவும் சிவஞானப்பிள்ளையார் கோவில் வழிபடுவோர் சங்கத் தலைவராகவும் பணிபுரிந்துவருகிறார்.

— என். பி. பொன்னுத்துரை

## வருடாந்த மகாநாடு

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர் காங்கிரஸின் வருடாந்த மாநாடு இம் மாதம் 24ம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலய மண்டபத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியும் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவருமான எம் எஸ். செல்லச்சாமி தலைமையில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் கிராமிய தொழிற்றுறை அமைச்சரும் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் போஷகருமான திரு. சௌ. தொண்டமான், கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டில் இலங்கை ஆசிரியர் காங்கிரகின் செயலாக்க அறிக்கையை பொதுக் காரியதரிசி, திரு க. சிவஞானம் சமர்பிப்பார் அதைத் தொடர்ந்து நடப்பாண்டுக்குரிய நிர்வாகசபை தெரிவு செய்யப் படும்.


# பிரயாண ஒழுங்கு

★ கனடா ★ ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

செய்து எங்கள் முகவர் உங்களை

அழைத்துச் செல்வார்

மத்திய கிழக்கு நாடுகளில் வருமான ஆதரவும் பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும். தஸ்தாவேஜுகளுடன் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன் பாஸ்போட், BOND சகல நாடுகளுக்குமான விமான ரிக்கற்றுக்களும் துரிதகதியில் செய்து தருகிறார்கள்.

தொடர்பு:-


GROUP ATLANTIC TRAVELS

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

A-349


## தலைவராகத் தெரிவு



[யாழ்ப்பாணம்]

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் துறை மாணவர் மன்றத்தலைவராக செல்வன், து. இராஜன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் யாழ்மாநகராட்சி மன்ற முன்னாள் துணை முதல்வர் ஆ. துரைராஜசிங்கத்தின் புதல்வரும் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியின் குடிசார் யந்திரவியல் 2ஆம் வருட மாணவனும் யாழ் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவனும் ஆவார். இம் மன்றத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றானபாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான செயற்பாட்டுடன் மன்றம் தனது கன்னிப்பணியை ஆரம்பிக்கும்

மன்றத்தின் காப்பாளராக கல்லூரி அதிபர் திரு. எஸ். இராசேந்திரா உள்ளார்,

மன்றத்தின் பதவியாளர் விபரம் வருமாறு: தலைவர்:- து. இராஜன் உப தலைவர்:- ஸ்ரான்லிம்மாகன் செயலாளர்:- ஜி.அன்பரசி உப செயலாளர்:- வி. பாலசுப்பிரமணியம் பொருளாளர்:- எம் ஜெயக்குமாரன் பத்திராதிபர்:- என். நவகுலராஜா உப-பத்திராதிபர்?- ஸ்ரீ. பெ பாலரஞ்சன் வி. ஜே அரியரத்தினம் கணக்குப் பரிசோதகர்:- கே. சற்குணராஜா

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்கள் இ தனபாலகு சோமாஸ்கந்தமூர்த்தி ஏ. நெமிநாதன். எஸ் மனோகரன், சி. ரவீந்திரன் ஆர் முத்துராஜ் எஸ். சத்தியசீலன், வி. நாகராஜன், எஸ், ஞானகுமார், கே கதிரவேலு ரி கே. சிவகுமார், ரி. நிரஞ்சனி, எஸ். கருணாகரன், எம். சுந்தரலிங்கம், எம். எஸ். தியாகராஜ், சி. முரளிதரன்.

## நெஞ்சில் நிலைத்தவர்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலகயுத்தத்தின் போது ஆங்கிலேயர் தமது விமானத் தளங்களை தமிழ் மக்கள் வசிக்கும் திருகோணமலையிலும், பலாலியினிம் அமைத்த போது தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டு தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்வி பயின்ற திரு எஸ். வி பொன்னுத்துரை வெள்ளையர்களால் சிரேஷ்ட பதவியில் திருமலையில் அமர்த்தப் பட்டார். இவரின் நேர்மையும் கடமைத் திறமையும் கண்டு வியந்த ஆங்கிலேயர் பலாலி விமானத்தள அமைப்பு வேலைக்கு அமரர் பொன்னுத்துரை அவர்களையே சுதேச சிரேஷ்ட அதிகாரியாக அமர்த்தினர். குறுகிய காலத்திற்குள் இத்தளத்தை முடிவுறச் செய்ய வேண்டுமென்ற காரணத்தால் மேலதிகமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பொறுப்பையும் அவரிடமே ஒப்படைத்தனர். இச் சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி வலி வடக்கிலுள்ள பெரும்பாலானோர்க்கும் மற்றும் பகுதிகளில் வதித்த 6000 மக்களைச் சேவைக்கமர்த்தினர். குறிப்பாக கட்டுவன், வசாவிளான், பலாலி, மயிலிட்டி. காங்கேசன்துறை, தெல்லிப்பழை,மல்லாகம் மக்கள் பெருமளவு பயனடைந்தனர். சுயநலமற்ற சேவையில் கட்டுநாயக்கா விமானத்தளவேலைக்கும் அமர்த்தப்பட்டார். இவ்வேலைகள் முடிந்ததும் அமரர் மருத்துவ சேவைப் பகுதியிலும் இறுதியில் புகையிரத அதிகார் சேவையிலும் சேர்ந்து இறுதியாகக் காங்கேசன்துறை புகையிரத நிலைய பொறுப்பதிகாரியாக சேவையாற்றி இளைப்பாறினர் 82 மார்ச்சில் இறைவனடி எய்தினர். நேற்று இவர் நினைவையொட்டி தெல்லிப்பழை ஞான வயிரவர் கோவிலில் அன்னதானமும் மற்றும் பல கோவில்களில் விசேட பூசைகளும் நடைபெற்றது.

# விழிப்புக்குழு சேவைக்கு பொதுமக்கள் பாராட்டு

[சுன்னாகம்]

விழிப்புக்குழுவினர் ஏழாலை மத்திய பகுதியில் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளால், அப்பகுதியில் இடம் பெற்று வந்த சமூகவிரோத செயல்கள் அற்றுப்போனதாக பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

சூதாட்டம், களவு, கசிப்பு உற்பத்தி என்பன ஏழாலை மத்திய பகுதியில் இடப்பெற்று வந்ததைத் தொடர்ந்து, கட்டுவன் தெற்கு ஏழாலை மேற்கு பாரதி ச. ச. நிலையவிழிப்புக் குழுவினர் திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அண்மையில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த கோஷ்டியொன்று இவ் விழிப்புக் குழுவிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். அக்கோஷ்டியினர் வைத்திருந்த ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் தலா 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டு, கடுமையாக எச்சரிக்கையும் செய்யப் பட்டார்களாம்.

மேலும் களவாடப்பட்ட நீரிறைக்கும் பைப் ஒன்று ஒரு நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும், கசிப்பு உற்பத்தி செய்வோரின் உபகரணங்கள் பறிமுதல் செய்யப் பட்டதாகவும் விழிப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(மா)

# இன்றைய பலன்

மாதம்: மாசி
திகதி: 27 [1986-3-13]
கிழமை; செவ்வாய்
திதி: பிரதமை மு. இ.வரை
நட்சத்திரம்: பூரட்டாதி முற்பகல்வரை

மேடம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும். சிலருக்கு திடீர் தருமணமும் நிச்சயிக்கப்படலாம்.

இடபம்: மயக்கும் மொழியில் பணத்தை இழக்க நேரிடலாம். திருடர் பயத்திற்குமிடமுண்டாம். முடக்கிய வேதனமும் கவலையைத் தரலாம்.

மிதுனம்: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி எடுப்பீர்கள். ஆராய்ச்சித்துறைகளிலும் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். வாகனநலனும் உண்டு.

கடகம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளைப் பெருக வைக்கும். தள்ளி வைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர். பூமியால் முன்னேற்றமுண்டு.

சிங்கம்: சத்துரு பகைகள் தோன்றும். இதயத்தில் அமைதி குன்றும். எதிர்பாராத விளைவுகள்மூலம் செலவுகளும் அதிகரிக்கும்.

கன்னி: இறை வழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதி ஏற்படும். சினேகிதர் வழியால் நன்மையுண்டு.

துலாம்: கடமையில் கண்ணியம் தவறக்கூடும். தனி வழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். எவ்விடயத்திலும் முன்யோசனையுடன் நடந்து கொள்ளவும்.

விருச்சிகம்: தநதை வழித் தனமும் உண்டு. மனதின் சஞ்சல நிவர்த்திக்கிடமுண்டு குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்.

தனுசு: இலட்சிய நோக்குடன் வீறுநடை போடுவீர்கள் தொழில் முன்னேற்றமுண்டு மனைச்சிறப்புமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.


மகரம்: பெரியோர் ஆதாவு பலமாகக் கிடைக்கும். அதிர்ஷ்டலாபங்களும் கிட்டலாம் மகிழ்ச்சிதரும் சம்பவமொன்றும் இடம்பெறலாம்

கும்பம்: கடன் தொல்லை அதிகரிக்கும். விரக்தி நிலை உருவாகும். மின்னியல்பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுவோர் கவனம் அவதானம் நன்று.

மீனம்: உடல்நலம் குன்றும். புதியமுதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சிந்தித்தபின் செயலாற்றவும். சுமாரான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## தவக்காலச் சிந்தனை



21-ம் நாள்

இறைவன் ஒருவரே, அவரே மனித வாழ்வின் முதலும் முடிவும் நிறைவும் ஆனவர். மனித வாழ்வின் ஊற்றும் ஒளிச்சுடரும் ஆக திகழ்பவர்

இன்றைய சமுதாயத்திலே குறிப்பாக இளைஞர் மத்தியிலே இறைவனில் கொள்ளும் அன்புறவு, விசுவாச உணர்வு, குறைந்து வருகின்றது. இதனால் மக்கள் மத்தியில் எங்கு பார்த்தாலும் பகையும், கொலையும், கொள்ளைகளும் மலிந்து மனித வாழ்வின் அமைதி குலைந்து மனித மாண்பு மறுக்கப்பட்டு மனிதன் மேலும் மேலும் இழிவு நிலைக்கு அதாவது இறைவனின் அரவணைப்பில் இருந்து பிரிந்து போகின்றான் மன மகிழ்ச்சியை இழந்து தவிக்கிறான்

இறைவனை மனித வாழ்க்கையில் ஏற்று விசுவசித்து வாழ முற்படுகின்றபோது வாழ்க்கையில் வசந்தத்தை- மகிழ்ச்சியைக் காணுகின்றோம் வாழ்க்கையில்நிறைவை அடைகின்றோம். இறை ஒன்றிப்பிலே ஒன்றிக்கின்றோம். உண்மை, அன்பு, நீதி, நேர்மை, மன்னிப்பு போன்ற உயர் குணங்களை நிறைவாகக் கொண்டவன் இறைவன். அவன் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் அக்குணங்களை சிறிதளவாகிலும் பெற்றே பிறந்துள்ளான். அவற்றை வளர்ப்பதே மனிதவாழ்வின் இலட்சியம். இதுவே இறைவனை அடையும் வழியாகும்.

அவரே எமது அடைக்கலமும் பலமும் நம்பிக்கையும் நெருக்கடி வேளையில் உறு துணையும் ஆவார். அவர் தரும் ஊற்றில் பருகுவோர் உயிர் பெறுவர். எந்த இக்கட்டு இடைஞ்சல்வேளையிலும் இறைவனில் கொள்ளும் பற்று எம்மைக் காக்கும். எமக்கு விடுதலை அளிக்கும்.

அருட்திரு சகோ.
அற்புதராசா

# சபாஷ் சென். பற்றிக்ஸ்!

## 22 வருட சாதனை முறியடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் மிடையில் நடைபெற்ற 86 - வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப் போட்டியில், சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு தோல்வி நிச்சயம் என கரகோஷம் செய்த ரசிகர்கள் கூட்டம் சாதுரியமாக விளையாடி 22 வருட சாதனையை முறியடித்ததை பார்த்த பின், ''சபாஸ் சென். பற்றிக்ஸ்'' என அதே ரசிகர்கள் கூட்டம், வாய் விட்டுக்கத்தி கரகோஷம் செய்தனர் இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் சகல விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து இழந்து மொத்தம் 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி பந்து வீச்சு வீரர்களான நித்தியரஞ்சன் 17 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும். காப்டன் ஜி. ராகவன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்கள்

யாழ்ப்பாணக் கல்லூரியும் தனது முதலாவது இன்னிங்ஸில், சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் பந்து வீச்சு வீரர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தமது விக்கெட்டுகளை இழந்த வண்ணம் இருந்தனர். இவர்கள் ஒரு கட்டத்தில் 68 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்திருந்தனர். இதன் பின் துடுப்பெடுத்தாடிய அன்ரன் ராஜகாரியரும், விஜயகுமாரும் வேகமாக ஓட்டங்களை எடுத்து தமது எண்ணிக்கையை 122 உயர்த்தியதும், ஆட்டமிழந்தனர்.

சென். பற்றிக்ஸ் கோஷ்டி 2 - வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட முற்பட்டதும் ரசிகர்கள் மத்தியில் பெரும் ஐயம் ஏற்பட்டது யாழ்ப்பாணக் கல்லூரி பந்து வீச்சு வீரர்களின் சாதுரியமான பந்து வீச்சுக்கு ஈடு கொடுப்பார்களா அல்லது, முதல் இன்னிங்ஸில் ஏற்பட்ட சரிவு இதிலும் ஏற்படுமா. என ரசிகர் கூட்டம் எண்ணியது.

இவர்கள் அனைவரினதும் எண்ணங்களில் மண்ணைத் தூவிய மாதிரி, சென். பற்றிக்ஸ் துடுப்படி வீரர்களான சவரிமுத்து, பத்திநாதர், காப்டன் கிளஸ்ரன் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தடினர்கள். 2 - வது விக்கெட் சோடிகளாக துடுப்பெடுத்தாடிய சவரிமுத்துவும். பத்திநாதரும் 22 வருடங்களுக்கு முன் இப்போட்டியில் ஏற்படுத்தப்பட்ட சாதனையை முறியடித்தனர். சென். பற்றிக்ஸ், 2 - வது இன்னிங்ஸில் மொத்தம் 167 ஓட்டங்களைப் பெற்றது காப்டன் ஜி. ராகவன் 47 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர்

இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடையும் போது, யாழ்ப்பாணக் கல்லூரி 2 - வது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

### பரிசு பெற்றவர்கள்

சகல துறைகளிலும் சிலவீரருக்கான பரிசை சென். பற்றிக்ஸ் காப்டன் எஸ், ஏ கிளாஸ்டன் தட்டிக் கொண்டார். சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசை, யாழ்ப்பாணக் கல்லூரி காப்டன் ஜி இராகவன் பெற்றார்.

சிறந்த பந்து தடுப்பு வீரருக்கான பரிசை, சென் பற்றிக்ஸ் விக்கெட் காப்பாளர் ஏ. ரி. ஏ. செல்வராஜா பெற்றார். (வி)

# அபிவிருத்தி திட்ட வேலைகளுக்கு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கு கோவில் சந்தைக்கு மின் விளக்கு அமைக்கவும், வெள்ளம் தேங்கி நிற்காதபடி மணல் இட்டு நிரப்பவும் நெல்லியடி அபிவிருத்திச் சங்க உப காரியாலயத்தின், அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் சம்மதம் தெரிவித்துள்ளதற்கு துன்னாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் இப்பகுதி மக்களும் மேற்படி அலுவலர்க்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

துன்னாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. இரத்தினசிங்கம் தலைமையில் பொதுச் செயலாளர் திரு மூ. சிறிக்கந்தராசா, உப தலைவர் திரு. சி. சிவசம்பு, நிர்வாகக்குழு உறுப்பினர் திரு. சி. கந்தசாமி ஆகியோர் நெல்லியடி அபிவிருத்திச் சங்க உப காரியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் திரு கே. சண்முகநாதனை அவரின் பணிமனையில் சந்தித்து விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை ஏற்றே அலுவலர் மேற்படி அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேலும், இப்பகுதியில் உள்ள வேரோண்டை சுடலைக்கு செல்லும் பாதையைத் திருத்தம் செய்யவும், கலிகைத் தாமரைக்குள வீதிக்கு மின் விளக்குகள் அமைக்கவும் அலுவலர் சம்மதம் தெரிவித்துள்ளார் இவ்வேலைகள் யாவும் இவ்வருட முடிவுக்குள் செய்யப்படும். (ஐ)

# வித்தியாலயத்துக்கு விஞ்ஞான ஆய்வுகூடம்

(புலாலி)

''வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் வசதிகள் குறைந்த வித்தியாலயமாக இருக்கின்றபோதும் பல்வேறு துறைகளிலும் சிறப்பாக இயங்கிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வித்தியாலயத்திற்கான விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை அமைத்துத்தர நான் நடவடிக்கையெடுப்பேன்.''

இவ்வாறு வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் கூறினர். வித்தியாலய அதிபர் எஸ். முத்துக்குமாரசுவாமி தலைமையில் போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய திரு. சுந்தரலிங்கம் தமதுரையில்; மாணவர்கள் ஒழுக்கம் கட்டுப்பாடு சகிப்புத் தன்மை கீழ்படிதல் விட்டுக்கொடுத்தல் போன்ற நற்பண்புகளை விளையாட்டிலிருந்து கற்றுக்கொள்ளலாம். கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டுத்துறையிலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபடும்போது தான் மாணவர்கள் வாழ்க்கையில் எதிர்காலத்தில் வெற்றிபெறமுடியும்'' என்றார்.

யாழ். உடற்கல்வியதிகாரி திரு. வி. தங்கராசா தமது உரையில், ''இவ்வித்தியாலயம் வசதிகள் குறைந்த கிராமப்புற வித்தியாலயமாக இருந்தபோதும் நகர்ப்புறப் பாடசாலைகளுடன் போட்டி போடக் கூடியளவில் பல்வேறு துறைகளிலும் இருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்'' என்றார்.

கோப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராஜா தமதுரையில்: ''எமது புதிய கல்விப்பணிப்பாளர் விஞ்ஞானத்துறை, கலைத் துறைகளில் ஆற்றல் மிக்கவர். அவர் எங்கள் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்பது நம்பிக்கையாகும்'' என்றார்.

# ''சனசமூக நிலையத்தின் பங்கு கிராம முன்னேற்றத்துக்குத் தேவை''

(சாவகச்சேரி)

கிராமத்தின் பொதுத் தேவைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவும் கிராமமக்கள் மத்தியில் ஐக்கியம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் போன்றவற்றினை ஏற்படுத்தவும் கிராமங்களில் உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் நல்ல பணியாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்

இவ்வாறு கைதடி நுணாவில் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் பொதுச் செயலாளர் வீ. எஸ். துரைராஜா உரையாற்றுகையில் கூறினர்

தொடர்ந்து அவர் தமதுரையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் உன்னத நிலையினை அடைகின்ற இன்றைய காலகட்டத்தில் கிராமங்களில் இயங்குகின்ற சனசமூக நிலையங்கள் மக்களிடையே ஒற்றுமையையும் இன உணர்வினையும் ஏற்படுத்தப் பாடுபட வேண்டும் என்றார்

அதைத் தொடர்ந்து நிலையத்தின் புதிய தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட திரு.க. ச. சண்முகலிங்கம் நன்றியுரை கூறினர்.

# ''அரசியலில் சுடர்விட்டுப் பிரகாசித்தவர் குமாரசாமி''

(கிளிநொச்சி)

ஈழத்து அரசியல் வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த பெருந் தலைவர் அமரர் குமாரசாமி'' என்று சாவகச்சேரி மணியம் வளவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமரர் குமாரசாமியின் 9வது நினைவாஞ்சலிக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினர்.

பெரும் தொகையானோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் ஆசிரியமணி சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் ''ஈழத்தவர்களாகிய நாம் எவ்வாறு அமரர்கள் செல்வநாயகத்தையும், ஜி ஜி பொன்னம்பலத்தையும் மறக்க முடியாதோ அதேபோல் குமாரசாமியையும் மறக்க முடியாது. இவரது சேவையை இன்றைய நமது இளைய சந்ததியினர் தெரிந்து வைத்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும் அமரர் குமாரசாமி எம்.பியாக இருந்த காலத்தில் தென்மராட்சியின் முடிசூடாமன்னனாகத் திகழ்ந்தார். அவர் ஒன்பதுஆண்டுகள் செய்த அளப்பரிய சேவைகளால் தென்மராட்சி முன்னணிக்கு வந்தது'' என்றார்

சமாதான நீதவானும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான திரு. அ. ஆறுமுகம் பேசுகையில்; ''தமிழ் மக்கள் இன்று சொல்லொணத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அமரர் குமாரசாமி வடக்கில் சேவைகளால் உயர்ந்த உத்தமன் என்றார்.

முன்னாள் சாவகச்சேரி பட்டினசபைத்தலைவர் எஸ் எஸ் பாலசுப்பிரமணியம் பேசுகையில் அமரர் குமாரசாமி வடக்கில் விவசாயத் துறை முன்னேறப் பெரிதும் பாடுபட்டார் தமிழன் அரசியல் பொருளாதாரத் துறைகளால் முன்னேற வேண்டும் என விரும்பினார் என்றார்.

# உலக சேமத்துக்காக அப்பர் திருபவனி

[யாழ்ப்பாணம்]

தை மாதம் முதலாம் திகதி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலிருந்து உலக சேமத்தின் பொருட்டு நாயன்மார்களில் ஒருவரான அப்பர் சுவாமிகளின் திருவுரு சைவ அடியார்களால் ஊர்வலமாக எடுத்து வரப்படுகின்றது

நேற்றுக்காலை யாழ் சாந்தையர்மடம் பிள்ளையார் கோவிலிருந்து அப்பரின் திருவுருவம் யாழ் நகர் வீதிகளினூடாக யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு எடுத்துவரப்பட்டது பாடசாலை மாணவர்கள் ,ஆசிரியர்கள் அணிவகுத்து நடைபவனியாக வந்துகொண்டிருக்க மங்களவாத்தியம் முழங்க அப்பர் திருவுருவம் வாகனத்தில் வைத்து பவனியாகக் கொண்டுவரப்பட்டது.

நேற்று திருவுருவம் யாழ் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அடியார்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்தது

இன்று வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலிருந்து யாழ் வண்ணை பெருமாள் கோவில் தருமகர்த்தாக்களின் தலைமையில் பெருமாள் கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும்.

பின்னர் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து நல்லை ஆதீனத்தை நோக்கி நடைபவனி இடம்பெறும். இறுதியாக திருக்கேதீஸ்வரத்தை அடையும் பொருட்டு திருவுருவம் எடுத்துச் செல்லப்படும் போகும்வழிகள் யாவும் பல்வேறு சைவ அமைப்புக்களும், அடியார்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்வார்கள்.

உலக மக்களின் உய்வுக்காக இந்த நடைபவனி ஊர்வலத்தை முன்னாள் பரமேஸ்வரா கல்லூரி உபஅதிபர் திரு. எஸ், ஞானப்பிரகாசம் அவர்கள் ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஐ]

# ''தன்னலமற்ற சேவைக்கு தன்னை அர்ப்பணித்தவர்''

[கிளிநொச்சி]

'சாவகச்சேரி இந்துக்கல்லூரி நல்லமுறையில் முன்னேற தன்னை அர்ப்பணித்துச்செயல்பட்ட பெருமகனர் அமரர் சங்கரப்பிள்ளையாவார். இவரது தன்னலம்கருதா சேவையால் மாணவ- ஆசிரிய சமுதாயம் முன்னணிக்கு வந்தது.'

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 14 ஆண்டுகள் கனிஷ்ட அதிபராக பணிபுரிந்து ஓய்வுபெற்றபின் அமரத்துவம் எய்திய சி. சங்கரப்பிள்ளையின் நினைவாக உருவப்படமொன்றை திரைநீக்கம்செய்து வைத்து உரையாற்றுகையில் கல்லூரி அதிபர் திரு. குகதாசன் கூறினர்.

பெருந்தொகையான மாணவர்களும், கல்வி உலகப் பிரமுகர்களும் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் அதிபர் குகதாசன் மேலும் பேசுகையில்: 'அமரர் சங்கரப்பிள்ளை தென்மராட்சியில் ஆசிரியர் சங்கங்களின் வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டு உழைத்தார். பல சமூக சேவைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினர் பொதுச்சேவையால் புகழைத் தேடினர். இவர் அமரத்துவம் எய்திவிட்டாலும் அவரது சேவைகளை என்றும் நாம் நினைவுகூருவோம்' என்றார்.

# மிகச் சிறந்த...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாசாரப் புரட்சிக் காலத்தோடு ஒப்பிடுகையில் இன்று தொழிலாளர்கள் விவசாயிகள் திருப்தியுடன் வாழ்கின்றார்கள் இதற்காக தலைவர் திரு டெங் - ஷியாவ் பிங்கை மக்கள் மிகவும் போற்றுகின்றார்கள். சீனவில் உள்ள சீன எழுத்தாளர்களும், வெளிநாட்டு எழுத்தாளர்களும் தங்கள் படைப்புக்களில் இந்தக் கருத்தை நிரூபிக்கின்றார்கள். கலாசாரப் புரட்சியின் போது மிகவும் பாதிக்கப்பட்ட சீன எழுத்தாளர் சங்கத் தலைவரும் உலகின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளருமான திரு. பாஜின் கூறியவை இங்கு சாலப்பொருந்தும் ''எல்லாம் நல்ல படியாகவே நடக்கின்றன, சீன விரைவில் ஒரு தலை சிறந்த சமியூனிஸ்ட் நாடாகத் திகழும்''.

ந. நரேந்திரன்
கன்னுதிட்டி

# சிமெந்து ஆலை வாயில் மாற்றம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் சிமெந்து பெறச் செல்லும் வாயில் திடீர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதால் சிமெந்து பெறச் செல்வோர் மத்தியில் பெரிதும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக் கூறப்படுகிறது.

சிமெந்து ஆலையின் பிரதான வாயில்,அலுவலக வாயில் ஆகியன வாகனங்கள் புக முடியாதவாறு தடுப்புக்கள் போடப்பட்டுள்ளன. இதனுல் சிமெந்து பெறச்செல்லும் வாகனங்கள் இவற்றினுல் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் உள்ள பாதை ஒன்றின் ஊடாகவும், வடக்குப்புற வாயில் ஊடாகவும் வாகனங்கள் இனிமேல் சென்று சிமெந்தைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அப்பாதைகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளமை சிமெந்து பெறச்செல்வோர் மத்தியில் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறுன தடுப்புகள் போடப்பட்டது தொழிலாளர் மத்தியிலும் பீதியை உருவாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## 'முகமூடி' தலையாட்டி 8 இளைஞர் கைது!

[கல்முனை]

'முகமூடி' மனிதர்களால் அடையாளம் காட்டப்பட்ட எட்டு இளைஞர்கள் கல்முனை நகரில் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் எனத்தெரிய வருகிறது. [ஷ]

## காட்டிக்கொடுப்பவர்; குட்டை குழப்புபவர் பற்றி 'புலிகள்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''நெருக்கடிமிக்க காலகட்டத்தில் இன்றும் தம் சுயநலனுக்காகத் தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் உயிரின் ஒளியாகிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தமிழ்பேசும் எவர் ஒருவரையும் பயங்கரவாதியாக்கிக் கொன்று குவிக்கும் அரச ராணுவத்துக்கு இன்னும் துணைபோவோரை நாம் எச்சந்தர்ப்பத்திலும் மன்னிக்கமுடியாதவராயள்ளோம்.''

'தமிழீழ விடுதலைப் புலிகள்' விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

'லங்காபுவத்' துடன் இணைந்த தொலைக்காட்சி, வானொலி செய்தியின் உண்மை நிலையை விளக்கும் நோக்குடன் இவ்வறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

''சிறிலங்கா அரசு தன் பிரசார சாதனங்களின் மூலம் தமிழீழ மக்களிடையே குழப்பத்தைத் தோற்றுவிக்கப் பகீரதப்பிரயத்தன முயற்சிசெய்து வருவது கண்கூடு. ஆனால் எம் மக்கள் 'லங்காபுவத்' துடன் இணைந்த தொலைக்காட்சி, வானொலிச் செய்தியின் உண்மை நிலையைத் தெளிவாகவே உணர்வர்.

''இவ்வாறு அரசிற்குத்துணை போவோர், காட்டிக்கொடுப்போர் சுட்டுக்கொல்லப்படும் போது அரசின் பிரசார சாதனங்கள் பல்வேறு புனைகதைகளைச் சூழ்ச்சியின் அடிப்படையில் புனைகின்றன

''இந்தவகையில் கடந்த 4ம் திகதி மார்க்கண்டு கெங்காதேவி எனும் பெண் சகல இயக்கத்தினரின் முகாம்களைப் பற்றியும், போராளிகளின் நடமாட்டத்தைப்பற்றியும் தகவல் கொடுத்தும், இராணுவ உயர் அதிகாரிகளான கிளிநொச்சி முகாம் இராணுவ அதிகாரி சொய்சாவுடனும், கொழும்பு தலைமையலுவலக அதிகாரி சில்வாவுடனும் துர்நடத்தையில் ஈடுபட்டதுடன், மாங்குளம், கொழும்பு, ஈாப்பெரியகுளம், கிளிநொச்சி இராணுவ முகாம்களுடன் நேரடித் தொடர்புகொண்டு காட்டிக் கொடுத்துவந்துள்ளார். இவர் மீதான விசாரணை நிரூபிக்கப் பட்டபின் இவருக்கு மரண தண்டனை விடுதலைப்புலிகளால் விதிக்கப்பட்டது.

''இதேபோல் பரந்தன் செல்வராஜா இராணுவமுகாமுடன் நேரடித் தொடர்பு கொண்டு போராளிகளைக் காட்டிக் கொடுத்து வந்துள்ளார். இவருக்கு இராணுவ ஆயுதங்களை இயக்கும் அறிவைக் கொடுத்ததுடன், தற்பாதுகாப்பு நடவடிக்கையையும் பயிற்றுவித்தும், வெளியே திரிந்து போராளிகளைப் பிடிக்கவும் முயற்சி செய்துள்ளார். இவரும் தீர விசாரிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டபின் விடுதலைப் புலிகளால் மரண தண்டனைக் குள்ளாக்கப்பட்டார்.

''ஆனால் 'லங்காபுவத்'தின் கூற்றுப்படி மார்க்கண்டு-கெங்காதேவி பயங்கரவாதிகளால் கெடுக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாயும், இயக்க மோதல்களால் பரந்தன் செல்வராஜா கொல்லப்பட்டதாயும் கூறியது. இவை போன்று தினம் தினம் தமிழ் ஈழமக்களைக் குழப்பத்திலாழ்த்தும் முயற்சிகள் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவை குறித்து தமிழீழ மக்களுட்பட அனைவரும் விழிப்பாயிருந்து உண்மைநிலை தெளிந்து செயற்பட வேண்டுகிறோம்.'' (மா)

## நயினாதீவு பயணிகள் படும் துயரம்

(நெடுந்தீவு)

நயினாதீவு பாதுகாப்புப் படையினரின் சோதனை, மிகவும் தீவிரம் அடைந்துள்ளது.

நெடுந்தீவு நயினாதீவு செல்லும் பிரயாணிகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர் என்ற பேதமின்றி சகலரும் படகைவிட்டு இறக்கப்பட்டு, சோதனைசெய்யப் படுவதுடன் அவர்கள்கொண்டு செல்லும் சகல பொருள்களும் அக்குவேறு ஆணிவேறாக அவதானிக்கப்படுகிறது.

## ஏவுகணைகளை முறியடிக்க படையினர் தயாராம்

[கொழும்பு]

மார்க்ஸிஸ தீவிரவாதிகள் ஏவுகணைகளைப் பாவித்து இயங்கினாலும் அதனை முறியடிக்க பாதுகாப்புப்படையினர் தயாராக இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்துள்ளன.

''வடகிழக்கு மார்க்சிஸ தீவிரவாதிகள் சோவியத் ஏவுகணைகளைப் பெறமுயன்று தோல்வி அடைந்துள்ளனர். எனினும் இவர்களுக்கு சோவியத் ஏவுகணைகள் கிடைத்தாலும் கூட அதனை முறியடிக்க பாதுகாப்புப் படையினர் தயாராக உள்ளனர் என்றும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.''

'லண்டன் கார்டியன்' எனும் பத்திரிகை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பேச்சாளரான திரு அன்ரன் பாலசிங்கம் தாம் சோவியத் ஏவுகணைகளை இன்னும் ஆறுமாதத்தில் பெறமுடியும் என்று கூறியதாக செய்தி வெளியிட்டிருந்தது. இதுதொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே பாதுகாப்பு வட்டாரங்கள் மேற்படி கூறின. [ச]

## முழங்காவில் சேதம்: பிரஜைகள்குழு மகஜர்

பூநகரி]

முழங்காவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சு சம்பவத்தால் அப்பாவிப் பொதுமக்களின் வீடுகள் பல அதிக சேதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பூநகரி பிரஜைகள் குழு, தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''85 நவம்பர் முதலாம் திகதி முழங்காவில் பகுதியில் ஹெலிகொப்டரில் வந்திறங்கிய ஆயுதப்படையினர் இந்து ஆலயம் ஒன்றின் முன்னிலையில் வைத்து 5 பேரைச் சுட்டுக் கொன்றனர் இவ் விஷயத்தை அப்பொழுதிருந்த கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்திருந்தோம். கடந்த 6ம் திகதி முழங்காவில் பகுதியில் பொதுமக்கள் வாழும் இருப்பிடங்களுக்கு மேல் விமானமூலம் குண்டுவீசப் பட்டது இதனால் பொதுமக்கள் வசித்த வீடுகள் அதிக சேதமடைந்துள்ளன. இதனால் அவ் வீட்டில் வசித்தவர்கள் இருக்கஇடமின்றி கஷ்டப் படுகின்றனர். விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகளுள் ஒன்று வெடிக்காதநிலையில் நிலத்துள் புதைந்து கிடக்கிறது. போராளிகளை அழிப்பதாகக்கூறி அப்பாவித் தமிழ் மக்களையே தங்கள் படைவீரர்கள் கொல்கிறார்கள் அவர்கள் சொத்துக்களை அழிக்கிறார்கள் என்பதை மிகவும் ஆழ்ந்த கவலையுடன் தெரிவிக்கின்றோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஏற்பட்ட சலசலப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது மட்டக்களப்பு மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. தங்கவடிவேல்' செயலாளர் சாம் தம்பிமுத்து முன்னாள் செயலாளர் பிரின்ஸ் காசிநாதர் ஆகியோர் வெளிநடப்புச்செய்தனர்.

இதனையடுத்து கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

ஆயினும், கூட்டம் தொடர்ந்து நடைபெற்று கூட்டத்தின் புதிய நிர்வாகிளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர் திரு. ஜோ பெர்னன்டோ, உப தலைவர்கள்: திரு. க. சோதிவேல், திரு. கா. சின்னத்துரை, பொதுச் செயலாளர்: திரு. பொன். வேலுதாஸ், உப பொதுச் செயலாளர்: திரு அ. அந்தோனிமுத்து, தனாதிகாரி: திரு ஜி. சௌந்தரராஜன்.

## கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொலைசெய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான திட்டம்ஒன்றை தயாரிப்பதில் அரச அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள, தமிழ்-முஸ்லிம் கலவரத்தில் இறந்தவர்கள், போராளிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்க இந்த நிவாரண உதவி வழங்கப்படுமாம்.

வாராந்த இலவச பங்கீட்டு உணவுப்பொருட்கள், தொழில் வாய்ப்பு, நிதிஉதவி ஆகியன வற்றை உள்ளடக்கியே இத் திட்டம் தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. [மா]

## நாளை இரு நாடகங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் 'தமிழோசை' சஞ்சிகை வெளியீட்டுக்காக நாடக அரங்கக் கல்லூரியினரின் 'அபசுரம்' தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் 'பிரம்படிபட்டவர்கள்' என்னும் இரு நாடகங்களும் நாளை பிற்பகல் இரண்டு மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மேடையேறுகின்றன. [நா]

## 3 சர்வதேச ஸ்தாபனங்களுடன் இணைந்து இ. த. ஆசிரியர் சங்கம் நடத்தும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுதந்திர தொழிற்சங்கங்களின் கூட்டுச் சம்மேளனம், சர்வதேசசுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெட்ரிச் ஈபேர்ட் மன்றம் ஆகிய மூன்று சர்வதேச ஸ்தாபனங்களுடனும் இணைந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம், கருத்தரங்கை நடாத்தவிருக்கின்றது; 'தொழிற்சங்கத்தில் கிளை நிர்வாகிகளின் பங்கு' என்ற தலைப்பில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறும்.

இம்மாதம் 17ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இக் கருத்தரங்கின் ஆரம்ப விழாவிற்கு பிரெட்ரிச் ஈபேர்ட் மன்றத்தின் பிராந்தியப் பிரதிநிதி திரு. ஜேர்ட் பொட்டர்வேக் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்துவைக்கவிருக்கிறார். உதவித் தொழில் ஆணையாளர் உபாலி விஜயவீரா, இலங்கை மன்றக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி டி வெசும் பெருமா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கவிருக்கின்றார்கள்.

இ த. ஆசிரிய சங்கத்தின் தாய்ச்சங்க, மாவட்டசங்க கிளை நிர்வாகிகள்பலர் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள்.

## 'காங்கேசன் மலர்' வெளியீடு 18ம் திகதி

[யாழ்ப்பாணம்]

'காங்கேசன் கல்விமலர்' வெளியீட்டுவிழா வரும் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தைக் சேர்ந்த பாடசாலைகளின வரலாறு, வளர்ச்சி என்பனபோன்ற விடயங்களை அடக்கியதாக இம் மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சு. வித்தியானந்தனால் வெளியிட்டுவைக்கப்படவிருக்கும் இம் மலர் வெளியீட்டுவிழாவில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொள்வர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விழா நடைபெறும்

## விசர்நாய்க்கடி தடுப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துவரும் விசர்நாய் தொல்லையை நீக்க வளர்ப்புநாய்கள் எல்லாவற்றுக்கும் தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் ஒன்றை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளனர்.

கோப்பாயில் 10ம் 11ம் திகதிகளிலும், பித்தூரில் 12ம் 13ம் திகதிகளிலும் அச்சுவேலியில் 14, 15, 17ம் திகதிகளிலும் நல்லூரில் 18ம் 19ம் திகதிகளிலும் கொக்குவிலில் 20ம் 21ம் திகதிகளிலும் கோண்டாவிலில் 22ம் 23ம் திகதிகளிலும் நீர்வேலியில் 24ம் 26ம் 27ம் திகதிகளிலும் தடுப்புமருந்து ஏற்றப்படவுள்ளது.

பொதுமக்கள் எல்லோரும் தங்கள் நாய்களை அருகில் நியமிக்கப்படவுள்ள தடைமருந்து ஏற்றும் நிலையத்துக்குக் காண்டுவந்து நாய்களுக்கு தடைமருந்துஏற்றி கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர். கட்டாக்காலி நாய்களை அழிக்கும் திட்டமும் அவ்வப்பகுதி பொதுஇடங்களில்மேற்கொள்ளப்படவுள்ளது.

## அந்தக் கார் ..

வவுனியா]

ஒரு மாதத்திற்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட கொழும்பு 'றேமன்ட்'டுக்குச் சொந்தமான கார் வவுனியா விவசாயப் பாடசாலைக்கு அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

கொழும்பிலிருந்து அச்சுவேலியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரின் சடலம் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் காரில் கொண்டுவரப்பட்டது. இச்சடலம் கொண்டுவரும்பொழுது சாரதி உட்பட இரு சிங்களவர்களும் இரு தமிழர்களும் அக்காரில் இருந்தனர். வவுனியாவைக் கடந்து யாழ்ப்பாணம் வருவதற்கு 15 ஆயிரம் ரூபா கட்டணமாகப் பெறப் பட்டது.

அச்சுவேலியில் சடலத்துடன் இரு தமிழர்களும் நின்றுவிட்டனர். மீதி இரு சிங்களவர்களும் காரில் கொழும்பு திருமபிக் கொண்டிருந்தபொழுது புளியங்குளத்தில்வைத்து இனந்தெரியாதநபர்கள் காரிலிருந்த இருவரையும் இறக்கிவிட்டு அக்காரைக் கடத்திச்சென்றனர். நேற்று முன்தினம் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட கார் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu, Telephone, 22389, 24126